செ.வெ.எண்.254 நாள்.09.09.2019

காஞ்சிபுரம், சுகாதாரத் துறை சார்பில் டெங்கு மற்றும் டிப்தீரியா தடுப்பு நடவடிக்கை குறித்த ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம், சுகாதாரத் துறை சார்பில் டெங்கு மற்றும் டிப்தீரியா தடுப்பு நடவடிக்கை குறித்த ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் நல்லூறவு கூட்டரங்கில் இன்று (09.09.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் டெங்கு மற்றும் டிப்தீரியா காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக 0–17 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி, அங்கன்வாடி மற்றும் வீடுகளில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் Td என்று அழைக்கப்படுகின்ற டெட்டனஸ் மற்றும் டிப்தீரியா தடுப்பூசிகளை அனைத்து குழந்தைகளுக்கும் போடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார். அதன்படி மாவட்டத்திலுள்ள மொத்த குழந்தைகள் 8,57,739 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 3,13,764 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள குழந்தைகளுக்கு வரும் நாட்களில் தடுப்பூசி போடப்படவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான அனைத்து வட்டார மற்றும் நகராட்சிகளில் கொசுப்புழு தடுப்பு பணியாளர்கள் எண்ணிக்கை கூடுதலாக அதிகப்படுத்தி தினந்தோறும் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.ஜீவா, துணை இயக்குநர்கள் சுகாதாரப் பணிகள் மரு.செந்தில்குமார், மரு.பழனி, முதன்மை கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.